
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1149

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்


# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

56

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

## மதச்சார்பின்மைக்கு ஆபத்து, எச்சரிக்கை செய்த கலைஞர்!



தமிழ்நாட்டின் மத நல்லிணக்கம் நூற்றாண்டுக்கால பிணைப்பினைக் கொண்டது. அந்தப் பிணைப்புக்குள் எப்படியாவது ஊடுருவ முடியுமா என்பதுதான் ‘சங் பரிவார்’ அமைப்புகளின் ஒரே நோக்கமாக உள்ளது. திராவிட இயக்கக் கருத்தியலின் அடித்தளம்தான், அவர்கள் நுழைவதைத் தடுத்து வருகிறது என்பதை தமிழ்நாட்டின் முற்போக்கு ஜனநாயக சக்திகள் அறிவர்; மக்களும் அறிவர்.

மதுரை, திருப்பரங்குன்றம் விவகாரத்தை வைத்து, மதப் பிரிவினையைத் தூண்டலாம் என நினைத்தனர். ஆனால், அதற்கு இடம்தராமல் உறுதி செய்திருக்கிறார் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அந்த விவகாரத்தின்போது மத அடிப்படைவாதிகளின் பிரச்சாரமாக இருந்தது என்னவென்றால், ‘அயோத்தி போல மாற்றுவோம்’ என்றதுதான். அதாவது, அயோத்தியில் அவர்கள் எதை விதைத்து, என்ன அறுவடை செய்தார்கள் என்பதை கவனிக்கச் சொல்கின்றனர். ஆனால், அவர்கள் கவனிக்கத் தவறியது, அயோத்தி விவகாரத்தின்போது திராவிட முன்னேற்றக் கழகம் காட்டிய உறுதியும்; கலைஞரின் ஒப்பற்ற நேர்மையும்.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் சரிபாதி காலத்தில், மிகத் தீவிரமான பிரச்சினை அயோத்தி விவகாரம். அதை நோக்கிய பயணம்தான் 80-களில் நடைபெற்றது. 1980-களில் ‘ராம ஜென்ம பூமி இயக்கம்’ தீவிரமான காலத்தில் இருந்தே, அதுகுறித்த எச்சரிக்கையை கலைஞர் வெளிப்படுத்தி வந்தார்.

‘பாபர் மசூதி இடிப்பு’ விவகாரம் 1992-இல் நடந்தாலும் அதற்கு முன்பாகவே வட இந்தியாவில், குறிப்பாக உத்தரப்பிரதேசத்தில், மத அரசியல் தீவிரமடைந்து கலவரங்கள் உருவாகும் சூழல் உருவாகி வந்தது. இந்த ஆரம்பகட்டத்திலேயே அதனை அரசியல் அபாயமாகக் கண்டித்து எழுதியவர் கலைஞர். அவர் பதிவு செய்த கருத்துகள், பின்னர் நடந்த சம்பவங்களை முன்னறிவிக்கும் எச்சரிக்கையாக இருந்தன.

### 80 திட்டமிட்ட அரசியல் நிகழ்வு

1980-களின் இறுதியில், அயோத்தியை மையமாகக் கொண்டு மத உணர்வுகள் அரசியல் ஆயுதமாக மாற்றப்பட்டன. இந்தச் சூழலில், வட இந்தியாவில் இடையிடையே ஏற்பட்ட கலவரங்கள் குறித்து, கலைஞர் ‘முரசொலி’ கட்டுரைகளிலும் அரசியல் மேடைகளிலும் தொடர்ந்து கவலைகளை வெளிப்படுத்தியுள்ளார். அந்த நிகழ்வுகளைத் தனித்தனி வன்முறைச் சம்பவங்களாகப் பார்க்கவில்லை; மாறாக, ‘திட்டமிட்ட மத அரசியல் நகர்வு’ என்ற கோணத்தில் அணுகினார்.

“மத உணர்வுகளை அரசியல் ஆதாயத்துக்காகத் தூண்டுவது, நாட்டின் ஒற்றுமையை உடைக்கும் ஆபத்தான நடைமுறை” எனத் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். “மத அடிப்படையிலான கலவரங்கள் வெறும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை அல்ல; அவை சமூக அமைப்பை உடைக்கும் அரசியல் முயற்சிகளின் விளைவு” என்று எழுதி இருக்கிறார்.

அயோத்தி விவகாரம் அரசியல் மையமாக மாறத் தொடங்கியபோது, கலைஞர் தெளிவான எச்சரிக்கையை முன்வைத்தார். “ஒரு மதத்தின் பெயரில் மற்றொரு மதத்தின் அடையாளத்தை எதிர்த்து மக்கள் தூண்டப்படுவது, இந்தியாவின் அடிப்படை மதச்சார்பற்ற அடையாளத்திற்கு எதிரானதாகும்” என்று அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

### தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டம்

1990-ஆம் ஆண்டு, செப்டம்பர் 22-ஆம் தேதி சென்னையில், அன்றைய பிரதமர் வி.பி.சிங் தலைமையில் ‘தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டம்’ நடத்தப்பட்டது. அதற்கான முயற்சிகளை எடுத்தவர் கலைஞர். ‘அந்தக் கூட்டத்தை டெல்லியில் மட்டுமே நடத்தக் கூடாது, வெளியிலும் நடத்துங்கள்’ என அன்றைய பிரதமர் வி.பி.சிங்குக்கு வேண்டுகோள் வைத்து, மாநில அளவில் நடத்தவைத்தார்.

அந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையில், “நமது அரசு மதச்சார்பின்மைக் கொள்கையில் உறுதியான பற்றுக் கொண்டுள்ளதாகும். பல சமயத்தினரையும், பல இனத்தவரையும், பல மொழியினரையும் கொண்டது நம்முடைய நாடு. இத்தகைய ஜனநாயக நாட்டில் சிறுபான்மையினரின் உணர்வுகளையும் நலன்களையும் பெரும்பான்மையினர் மதித்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருவர் என்ற உறுதியை, நம்பிக்கையை சிறுபான்மையினருக்கு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். சிறுபான்மையினருக்கு அச்ச உணர்வு ஏற்படாதபடி பார்த்துக்கொள்வதில் பெரும்பான்மையினர் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அவர்களது உனர்வுகளைப் புண்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும்” என்று அயோத்தி விவகாரம் குறித்து, தனது நிலைப்பாட்டை எடுத்துரைத்தார்.

காலை முதல் மாலை வரை 9 மணி நேரத்துக்கு மேல் அந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அவ்வளவு தீவிரமாக சிறுபான்மையினர் பாதுகாப்பு சார்ந்த விவகாரங்கள் அங்கு அலசப்பட்டன. குறிப்பாக, அனைத்திந்திய அளவில் தலைவர்களை சிறுபான்மையினருக்கு ஆதரவான நிலைபாட்டை எடுக்கவைத்தார் கலைஞர். கூட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள் சங் பரிவார்களின் நோக்கத்திற்கு எதிரான கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். ‘தேசிய முன்னணியின் ஆட்சி கவிழ்ந்தாலும் பரவாயில்லை’ என சிறுபான்மையினருக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தனர். அவர்களை அன்றைக்கு வழிநடத்தியவர் கலைஞர்.

“ராமஜென்ம பூமி - பாபர் மசூதி பிரச்சினை’யிலிருந்து நாட்டைக் காக்க ஆட்சியையும் இழக்கத் தயாராக உள்ளேன் என்று பிரதமர் வி.பி.சிங் உறுதிபடக் கூறியிருப்பது பாராட்டத்தக்கதும் வரவேற்கத் தக்கதுமாகும்’’ என்று வி.பி.சிங்கின் நிலைப்பாட்டை கலைஞர் ஆதரித்தார்.

### அரசியல் பொதுநலம்

அத்வானியின் ரத யாத்திரையில் ஏற்பட்ட கலவரத்தின்போது, அதற்கு கடும் கண்டனத்தைப் பதிவு செய்த கலைஞர், அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று அறிக்கை விடுத்தார்.

“நாட்டின் ஒற்றுமையிலும் ஒருமைப்பாட்டிலும் அக்கறையுள்ள எவரும் அந்த யாத்திரையை ஏற்றுக்கொள்ள இயலாது. மதம் தனிப்பட்ட நம்பிக்கை; அரசியல் பொதுநலத்தை நோக்கமாகக் கொண்டது” என்கிற அடிப்படையிலிருந்து கலைஞர், இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மையைக் காப்பதற்கு முன்நின்றார். அந்த நாட்களில், திராவிட இயக்கத்தின் மதச்சார்பற்ற அரசியல் கோட்பாட்டினை இந்தியா முழுவதும் வலியுறுத்தினார் கலைஞர்.

சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் ஜனநாயகத்தின் மீதான அச்சுறுத்தல் என எச்சரிக்கை செய்ததுடன், மத உணர்வுகளைத் தூண்டி, அரசியல் ஆதாயம் தேடும் நடைமுறை தொடர்ந்தால், அது பெரிய அளவிலான சமூக மோதலாக மாறும் அபாயம் இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

1980-களின் இறுதியிலிருந்து அவர் எழுதியவற்றைப் பார்த்தால், பின்னர் நடந்த 1992-ஆம் ஆண்டு சம்பவத்தின் விதைகள், அதற்கு முன்பே விதைக்கப்பட்டிருந்தன என்பதைப் புரிந்துகொள்ளலாம். உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் மதரீதியாக நடந்த கலவரங்கள் குறித்து கலைஞர் எடுத்த நிலை, அந்த நிகழ்வுகளைக் கண்டிப்பதற்காக மட்டுமல்ல, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பெரிய ஆபத்தை எச்சரிக்கும் அரசியல் பார்வையாகவும் இருந்தது.

> “1980-களின் இறுதியிலிருந்து அவர் எழுதியவற்றைப் பார்த்தால், பின்னர் நடந்த 1992-ஆம் ஆண்டு சம்பவத்தின் விதைகள், அதற்கு முன்பே விதைக்கப்பட்டிருந்தன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.”

...நீளும்

## உத்தரப்பிரதேச முதலீடு ஒப்பந்தப் பித்தலாட்டம்!

உத்தரப்பிரதேசத்தில் ஏ.ஐ. தரவு தளம் (AI Data Centre), ஏ.ஐ. பல்கலைக்கழகம் ஆகியவற்றை அமைக்க, புஞ்ச் ஏ.ஐ. (Punch AI) என்கிற நிறுவனத்துடன், அம்மாநில அரசு ரூ.25,000 கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டுள்ளது. இந்தத் தகவலை, எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ள அம்மாநில முதலமைச்சர் யோகி, ‘நிர்வாகத்தை வலிமையாக்கவும், எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் எனப் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இந்த ஒப்பந்தம் அப்பட்டமான மோசடி என்கிற உண்மை, வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

உத்தரப்பிரதேச அரசு ஒப்பந்தம் செய்துள்ள ஏ.ஐ. புஞ்ச் நிறுவனம் 2025-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு ஸ்டார்ட் அப் கம்பெனி. ஆண்டு வருமானம் 50 இலட்சம் ரூபாய்கூட எட்டவில்லை. பெரிய அளவிலான முதலீடுகள் எதையும் திரட்டவில்லை. ஒரு தயாரிப்பையும் அறிமுகப்படுத்தவில்லை. பணியாளர்கள் 10-15 என்கிற எண்ணிக்கையை மட்டுமே கொண்டுள்ளது. துறை சார்ந்த போதிய அனுபவம் இல்லாத ஒரு நிறுவனத்தில், திடீரென உ.பி. அரசு 25 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய ஒப்பந்தம் செய்துள்ள செயல், பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அந்த அறிவிப்பு வந்த ஒரு மணி நேரத்திலேயே, உண்மைகளும் வெளிவரத் தொடங்கின. முதலீட்டு ஒப்பந்தத்தில் போலி தேசபக்தி முகமூடி கேலிக்கு ஆளானதையடுத்து, “ஒப்பந்தம் மட்டும்தான் செய்யப்பட்டுள்ளது, முதலீடு செய்யும் முன் விரிவாக ஆய்வு செய்யப்படும்” என விளக்கம் அளித்துள்ளார் யோகி. உண்மைகள் கைகளுக்கு எட்டும் தூரத்தில் உள்ளன. அதை மறந்துவிடுகிறார்கள்.

## ஃப்ளாஷ்பேக்



### கழகம்தான் அடையாளம்!



மு.க.சண்முகசுந்தரம்

1996-ஆம் ஆண்டு, என் தந்தை மு.கணேசன் அவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டபோது, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றுள்ளார். 1987-ஆம் ஆண்டு முதல் 2010-ஆம் ஆண்டு, அவர் இயற்கை எய்தும் வரை விராலிமலை நகரக் கழகச் செயலாளராகச் செயல்பட்டவர். 2001-2006 ஆண்டுகளில் விராலிமலை ஊராட்சி மன்றத் தலைவராகவும் இருந்து கழகப் பணியாற்றினார். மொழிப்போர் தியாகி சண்முகம் அவர்களின் உறவினர் என்கிற வகையிலும், கழகத்தின் மூன்றாவது தலைமுறை தீவிர விசுவாசி என்கிற வகையிலும் உயிர்மூச்சு உள்ளவரை கழகம்தான் அடையாளம்!

**- மு.க.சண்முகசுந்தரம், நகரக் கழகச் செயலாளர், விராலிமலை, புதுக்கோட்டை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தினசரி நான்கு கூட்டங்கள்!

1959-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தது கழகம். வேட்பாளர் தேர்வுக்குழுவின் தலைவராக இருந்த கலைஞர், 90 இடங்களில் வேட்பாளர்களை நிறுத்தினார். கழக முன்னணியினரும் கலைஞர்களும், நாளொன்றுக்கு நான்கு கூட்டங்களுக்கு மேல் பேசி ஆதரவு திரட்டினர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.